


**29.04.2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** இளையோர் திறன் ஆளுமை பெறுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு முனைப்புடன் மேற்கொள்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

**2.** அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

**3.** தமிழ்நாட்டில் குற்ற செயல்கள் நடைபெறா வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**4.** மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரைத் பெரும்விழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

**5.** கொழும்புவில் இந்தியாவிற்கு எதிரான சர்வதேச மகளிர் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றிபெற 277 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

**********

**பிரதமர்**

21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ப, நாட்டின் கல்விமுறையை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சங்கமம் மாநாட்டில் இன்று உரையாற்றிய பிரதமர், ஒவ்வொரு மாணாக்கரின் அறிவுத்திறனை மேம்படுத்த உலக தரத்திலான நுட்பங்களை மத்திய அரசு நம் நாட்டில் கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

உலகளாவிய படைப்பாற்றல் மையமாக நம் தேசத்தை உருவாக்கும் வகையில், இளையோர் திறன்ஆளுமை பெறுவதற்கான நடவடிக்கைகளை நோக்கமாக கொண்டு அரசு செயலாற்றுவதாக எடுத்துரைத்தார்.

நாட்டின் எதிர்காலம் இளைஞர்கள் கையில் உள்ளதால், வளமான எதிர்காலத்திற்காக, இளையோரை தயார்படுத்துவது அவசியம் என்றார்.

புதிய கல்வி கொள்கை, நாட்டில் பெரும் மாற்றங்களை முன்னெடுத்துச்செல்வதாக கூறிய அவர், திறமை, மனப்பான்மை, தொழில்நுட்பம், ஆகிய முப்பெரும் அம்சங்களுடன் இந்தியாவின் எதிர்காலம் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் வளர்ச்சி பெறும் என்றார்.

நம் நாட்டின் பல்கலைகழகங்கள், படைப்பாற்றல் திறனின் மையமாக திகழ்வதாக கூறிய அவர், அனைத்து மாணாக்கரும் உலக கல்வி சார்ந்த நுட்பங்களை பெறும் வகையில் **ஒரே தேசம் ஒரே சந்தா** முறை கொண்டுவரப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

செயற்கை நுண்ணறிவு, புலனாய்வு, உயிரி அறிவியல், உயிரி தொழில்நுட்பம், சுகாதாரம், மருத்துவ பிரிவுகளின் ஆய்வு மையங்கள், இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் தொடங்கப்படுவதை எடுத்துரைத்த அவர் இவற்றின்மூலம் ஆராய்ச்சிகளை முன்னெடுத்து செல்ல உறுதி ஏற்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மத்திய அமைச்சர்கள் திரு.தர்மேந்திரபிரதான், டாக்டர் ஜிதேந்திரசிங் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ள இந்த கருத்தரங்கில் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை முன்னெடுத்துச்செல்வது குறித்து விரிவாக ஆலோசிக்கப்படுகிறது.

**********

## Shehzad Poonawalla

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்ற சிறப்பு அமர்வை கூட்ட வேண்டும் என்று காங்கிரஸ், கோரிக்கை விடுத்துள்ளது.

காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே, எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல் காந்தி ஆகியோர் பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு தனித்தனியே எழுதிய கடிதங்களில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டவும், தீவிரவாதத்திற்கு எதிரான ஒருங்கிணைந்த தீர்மானத்தை மேற்கொள்ளவும், இந்த சிறப்பு அமர்வு கூட்டப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

இதனிடையே புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தி தொடர்பாளர் **Shehzad Poonawalla** இந்த தாக்குதல் தொடர்பான காங்கிரஸ் கட்சியின் ஒட்டுமொத்த தீர்மானம் என்ன என்பதை கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே தெரிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

பஹல்காம் சம்பவத்தில் மத்திய அரசுடன் தாங்கள் இணைந்திருப்பதாகவும், குற்றவாளிகளுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும் என்றும் காங்கிரஸ் கூறிய அதேவேளையில், கர்நாடக முதலமைச்சர் திரு.சித்தராமைய்யா தெரிவித்துள்ள கருத்து குறித்து கேள்வி எழுப்பினார்.

சில காங்கிரஸ் தலைவர்கள் இந்தியா மீதே குற்றம் சாட்டுவதாக திரு.பூனாவாலா குறை கூறியுள்ளார்.

**********

### அஞ்சலி

இதனிடையே அமெரிக்காவில் உள்ள இந்திய சமூகத்தினர் பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சிறப்பு பிரார்த்தனைகளை இன்று மேற்கொண்டனர்.

நியூஜெர்சியில் 20 அமைப்புகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட இந்திய அமெரிக்க சமூகத்தினர் ஒருங்கிணைந்து, இந்த தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதோடு, அமைதி, மீட்சி ஒட்டுமொத்த வலிமை ஆகியவற்றை வலியுறுத்தி சிறப்பு செய்திகளும் வெளியிடப்பட்டன.

பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தும் பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன.

ஒஹியோ, கனடா, டென்மார்க், இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஃபின்லாண்ட், ஜெர்மனி, ஸ்பெயின் நாடுகளில் உள்ள இந்திய சமூகத்தினரும் இத்தீவிரவாத தாக்குதலுக்கு எதிப்பு தெரிவித்து ஆர்பாட்டங்களை மேற்கொண்டனர்.

**********

### ஜெய்சங்கர்

இதனிடையே பஹல்காம் தீவிரவாத தாக்குதல் குறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கிரேக்க வெளியுறவு அமைச்சர் **ஜார்ஜ் ஜெராப் பெட்ரிட்டிசுடன் இன்று** பேசினார்.

எல்லை தீவிரவாதத்திற்கு எதிரான கிரேக்க நாட்டின் நடவடிக்கைகளை டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் பாராட்டினார்.

**********

**கருத்தரங்கம்**

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை கண்டறிவதற்கான கருத்தரங்கம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த கருத்தரங்கம் தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்துடன் ஒருங்கிணைந்து நடத்தப்படுகின்றது.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் புத்தாக்க எரிசக்தியின் பயன்பாட்டை வலியுறுத்துவதற்கான நடைமுறைகள் குறித்து இந்த கருத்தரங்கில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

**********

**சட்டப்பேரவை முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டு அமைதி நிலவுவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில், காவல்துறை தீயணைப்பு, மீட்பு பணிகள் துறை மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு இன்று பதில் அளித்த அவர், இதனால் தான் ஏராளமான தொழிற்சாலைகளும், தொழில்நிறுவனங்கள் முதலீடுகளை இங்கு மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

மாநிலத்தில் குற்றச்செயல்களை கண்டறிந்து உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுப்பதுடன், அவை நடைபெறாமல் தடுக்க வழிவகை செய்யப்படுவதாக கூறினார்.

செப்டம்பர் 6ஆம் தேதி காவலர் நாள் விழா கொண்டாடப்படும் என்று அறிவித்த முதலமைச்சர் இத்துறையில் 102 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

**--வாய்ஸ்..**

காவலர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும், அண்ணா பதக்கங்கள் 150ஆக உயர்த்தப்படும்,

முதலமைச்சர் காவலர் பதக்கங்களின் எண்ணிக்கை 4000 ஆக அதிகரிக்கப்படும்,

மாதாந்திர பதக்கபடி 500 ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் கூறினார்.

பெண் காவலர்களை தமிழ்நாடு சிறப்பு காவல்படையில் பணியமர்த்தும் வகையில் ஒற்றை நுழைவு முறை மீண்டும் கொண்டுவரப்படும் என்றார்.

பாலூட்டும் தாய்மார்களான பெண் காவல் பணியாளர்களுக்கு சுலபமான நிர்ணயம் செய்யப்பட்ட பணிநேரம் வழங்குவது உள்ளிட்ட அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.

**தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையங்கள் தரம்** உயர்த்தப்படும் என்று கூறிய அவர், தீயணைப்பு மீட்பு பணிகளுக்கு திருச்சியை தலைமையிடாக கொண்டு மத்திய மண்டலத்தை இரண்டாக பிரித்து விழுப்புரத்தில் புதிய மண்டலம் உருவாக்கப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

**********

**மானியக்கோரிக்கை - தங்கம் தென்னரசு**

சட்டப்பேரவையில் 2019-20, 2020-21 2021-22 ஆண்டுகளுக்கான மிகை செலவு குறித்த மானியக்கோரிக்கைகளை மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இன்று தாக்கல் செய்தார்.

பட்ஜெட்டிற்கு பிந்தைய கால கட்டங்களில் துறை வாரியாக ஏற்பட்ட மிகை செலவுகளுக்கான இந்த மானியக்கோரிக்கை குரல் வாக்கெடுப்பு மூலம் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

**********

**பாரதிதாசன்**

பாவேந்தர் பாரதிதாசனின் 135-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி சென்னை காமராஜர் சாலையிலுள்ள பாவேந்தரின் திருவுருவ படத்திற்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின், மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இன்று தொடங்கி வரும் 5-ம் தேதிவரை மாநிலத்தில் தமிழ் வார விழா கொண்டாடப்படுகிறது.

**********

**இருவரி**

**தேசிய புள்ளியியல் அலுவலகத்தில் 75ஆவது ஆண்டு** விழாவை ஒட்டி விருதுநகர் புள்ளியியல் அலுவலகம் சார்பில் ராமேஸ்வரத்தில் மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

தேசத்தின் வளர்ச்சி தூய்மை இந்தியா லஞ்ச ஊழல் எதிர்ப்பு போன்ற வாசகங்களை ஏந்திய பதாகைகளுடன் இப்பேரணி நடைபெற்றது.

**வேலூர் மாவட்டம் காட்பாடியில் கல்லூரி கனவு** திட்டத்தின்கீழ், உயர்கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி, ஆட்சித்தலைவர் திருமதி.சுப்புலெட்சுமி தலைமையில் இன்று நடைபெற்றது.

5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

**திருப்பத்தூர் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும்** தொழில்நெறி வழிகாட்டு மையம் சார்பில் மகளிருக்கான தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.

**நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு** மற்றும் தனியார் நிறுவனங்கள் பெண்கள் பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ள விவரங்களை மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு வரும் 15ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா அறிவுறுத்தியுள்ளார்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 31வது அகில இந்திய** மாங்கனி கண்காட்சி அடுத்த மாதம் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் இன்று நடைபெற்ற அனைத்து துறை அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், இக்கண்காட்சியில், மா அரங்குகள், சாதனை விளக்கம் அரங்கம், கேளிக்கை, கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெறும் என்றார்.

**********

**கோவில்**

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரைத் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் வரும் 12ஆம் தேதி நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**திண்டுக்கல் அருள்மிகு பத்மகிரீஸ்வரர் திருக்கோவில்** சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

திருக்கல்யாண வைபவம் வரும் 5ம் தேதியும்,

திருத்தேரோட்டம் 9ம் தேதியும்,

தீர்த்தவாரி 10ம் தேதியும் நடைபெற உள்ளன.

**********

**காஞ்சிபுரம்:**

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஆதிகேசவ பெருமாள் திருக்கோவிலின் ஸ்ரீராமானுஜர் அவதார திருவிழாவில் நாளை மறுநாள் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

**********

**மகளிர் கிரிக்கெட்**

கொழும்புவில் நடைபெறும் மகளிர் முத்தரப்பு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற 277 ரன் இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.

முன்னதாக டாஸ் வென்று முதலில் பேட் செய்த இந்தியா 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 276 ரன் எடுத்தது.

**********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் டெல்லியில் இன்றிரவு ஏழரை மணிக்கு டெல்லி கேப்பிட்டல்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸை எதிர்கொள்கிறது.

**********

**பேட்மிண்டன்**

சீன Xiamen-இல் நடைபெறும் சுதிர்மன் கோப்பை பேட்மிண்டன் போட்டியின் குரூப் டி பிரிவில் இந்தியா இன்று இந்தோனேசியாவை எதிர்கொள்கிறது.

**********